B2/8233 DC

**ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல்**

அனுப்புநர்
உறுப்பினர் செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
எண்.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

பெறுநர்
முதன்மை தலைமை பொறியாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

Rekha

கடித எண். பி2/8233/2016 நாள் 02.03.2017.

ஐயா / அம்மையீர்

பொருள் : செ.பெ.வ.கு. – திட்ட அனுமதி – பழைய நில அளவை எண்.65/1 பகுதி & 65/2 பகுதி, புதிய நில அளவை எண்.65/1A,1B, 1C,1D, 1E,1F,1G, 65/2A, 2B & 65/2C (பத்திரப்படி) நில அளவை எண்.65/1A & 65/2A1 (பட்டாவின்படி) ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம், பழைய மஹாபலிபுரம் சாலை, ஒக்கியம் துரைப்பாக்கம், சென்னை–ல் இரட்டை அடித்தளம் + தரைத்தளம் + 3 தளங்களுடன் மருத்துவ மனைகட்டிடம் ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்புக் கட்டிடப் பிரிவு எண். 356/2016 நாள் 23.05.2016 அன்று கிடைக்க பெற்ற திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. அரசாணை (பல்வகை) எண் 86.வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 28.03.2012.
3. அரசாணை (பல்வகை) எண் 303 .வீ.வ,மற்றும் ந.வ.துறை (ந.வ.4(1) துறை நாள் 30.12.2013.
4. தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறையிடமிருந்து மறுப்பின்மை சான்று ந.க.எண்.7883/B/2016 பெறப்பட்ட நாள். 20.07.2016.
5. .வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து விண்ணப்பதாரருக்கு அனுப்பிய இவ்வலுவலக இதே எண் கொண்ட கடித நாள்.03.01.2017.
6. விண்ணப்பதாரரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 09.01.2017.
7. தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து மறுப்பின்மை சான்று. ஒப்புதல் ஆணை எண். 170126642610, நாள். 24.02.2017, பிரேரணை எண்.F.1463MMN/OL/DEE/TNPCB/MMN/A/2017 நாள். 24.02.2017.
8. உயிர்–மருத்துவக்கழிவு மேலாண்மை (சுற்றுச்சூழல் உயிர்க்கழிவு அமைப்பு–இந்தியா (பி) லிமிட்)–யிடமிருந்து பெறப்பட்ட கடித நாள். 15.07.2016

........

3/3/17

பழைய நில அளவை எண்.65/1 பகுதி & 65/2 பகுதி, புதிய நில அளவை எண்.65/1A,1B,1C,1D, 1E, 1F, 1G, 65/2A, 2B & 65/2C (பத்திரப்படி) நில அளவை எண்.65/1A & 65/2A1 (பட்டாவின்படி) ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம், பழைய மஹாபலிபுரம் சாலை, ஒக்கியம் துரைப்பாக்கம், சென்னை–ல் இரட்டை அடித்தளம் + தரைத்தளம் + 3 தளங்களுடன் மருத்துவமனை கட்டிடத்தைக் கட்டுவதற்கு பார்வை–1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் பார்வை 5–ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2) விண்ணப்பதாரர் பார்வை 5–ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு, ரசீது எண்கள். B003275 நாள் 09.01.2017 –இல் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1) | வளர்ச்சிக் கட்டணம் | : ரூ. 2,21,400/– |
| 2) | கூர்ந்தாய்வுக் கட்டணம் | : ரூ. 6,165/– |
| 3) | வரன்முறைக் கட்டணம் | : ரூ. 2,26,790/– |
| 4) | திறந்தவெளிக் கட்டணம் | : ரூ.2,60,38,560/– |
| 5) | கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம் | : ரூ. 19,72,000/– |

| | | |
|---|---|---|
| 6) | கழிவு நீர் தொட்டிக்கான காப்புறுதி கட்டணம் | : ரூ. 1,03,000/– |
| 7) | அறிவிப்பு பலகைக்கான வைப்பு நிதி | : ரூ. 10,000/– |
| 8) | உள்கட்டமைப்பு வசதிக் கட்டணம் | :ரூ. 19,34,560/– |
| 9) | ஊக்கத்தளப்பரப்புக் கட்டணம் | -- |
| 10) | கொடி நாள் கட்டணம் | ரூ. 500/– |
| | மொத்தம் | :ரூ. 3,05,12,975/– |

3. உத்தேச திட்டத்திற்குக் கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்னால், குடிநீர் வசதிகளுக்கான வடிவமைப்புள் உள்ளனவா என்று உறுதி செய்து கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த்தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்க வேண்டும்,

5. அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகள் குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருப்பதும், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மீறியதாகவும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கு முரணாணதாகவும் கருதப்பட்டு அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. கிணறுகள் மேல் நிலை தொட்டிகள் மற்றும் கழிவு நீர்த்தொட்டிகள் சுகாதாரமுறையில் உறுதியாக மூடப்பட்டு கொசு தொல்லைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

7. எண்.பி/சிறப்புக் கட்டிடம்/59– A முதல் F வரை /2017, நாள் 02.03.2017 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்களின் தொகுதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 02.03.2017 ல் இருந்து 01.03.2020 வரை செல்லுபடியாகும்.

8. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு விண்ணப்பதாரர் முதன்மை தலைமை பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சியைப் அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகுதான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

9. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிப்பாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920–ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல், அதாவது சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், தமிழ்நாடு ஊராட்சி விதிகள், இது உள்ளாட்சி துறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 மூலம் வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர்/அபிவிருத்தியாளர்/பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர்/உரிமம் பெற்ற நில அளவையர்/ கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

10. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்– துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரைய பத்திரம், குத்தகைப்பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகாரப்பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

11. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. பார்வை எண்.4 மற்றும் 7–ல் கண்ட மறுப்பின்மை சான்றுகளில் குறிப்பிட்ட நிபந்தனைகளை கடைபிடிக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

3/3/17

(for) உறுப்பினர் –செயலருக்காக.

3/3/17

இணைப்பு : 1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் இரண்டு படிகள்
2. திட்ட அனுமதியின் இரண்டு படிகள்

<u>நகல் :</u>

1. M/s. சென்னை யூராலஜி,
ரோபோடிக்ஸ் இன்ஸ்டிடியூட், (பி) லிமிட்,
எண்.1. நஞ்சுண்டராவ் காலணி,
மைலாப்பூர்,
சென்னை–600 004.

2. உறுப்பினர்,
உரியதுறை (Appropriate Authority),
108, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

3. வருமான வரி ஆணையர்,
168, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

4. துணை திட்ட அமைப்பாளர்,
செயலாக்கப் பிரிவு, (தெற்கு )
செ.பெ.வ.குழுமம், சென்னை – 8.

பிஜே/3.3